## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. தமிழ்நாட்டிற்கான கல்விநிதியின் நிலை என்ன ?**

**ஆ.ராசா!**



சமக்ரா சிக்ஷா அபியான் மற்றும் PM SHRI திட்டங்களின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டநிதியின்விவரங்களைவெளியிட வேண்டும்எனதிமுக.எம்.பி.ஆ.ராசா மக்களவையில்இன்றுகேள்விஎழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டைபோல் புதிய கல்விக் கொள்கையை(NEP)ஏற்காதமாநிலங்களுக்குநடப்பாண்டில்இந்தத்திட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படவில்லை என்பது ஏற்புடையது அல்ல என்றும் கல்வித் துறை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின்வளர்ச்சிநலன்கருதி ஒன்றிய அரசு உடனடியாக நிதியை விடுவிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

**2. மருந்து தொழில்துறை ஊழியர்களின் வேலைப் பாதுகாப்பை உறுதி செய்க!**

**தயாநிதி மாறன்! – செல்வகணபதி கூட்டு அறிக்கை!**





மருந்து தொழில்துறை ஊழியர்களின் வேலை பாதுகாப்பை உறுதி செய்வதை வலியுறுத்தி திமுக எம்.பி தயாநிதி மாறன் மற்றும் திமுக எம்.பி. செல்வகணபதி வெளியுட்டுள்ள கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது :-

நாடு முழுவதுமுள்ள மருத்துவ தொழில் சார்ந்த விற்பனை பிரதிநிதிகளின் வேலைநிலையை மேம்படுத்துவதுகுறித்துஅரசு,மருந்து தொழில்துறைபிரதிநிதிகள்,அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் அகில இந்திய விற்பனை ஊக்குவிப்பு ஊழியர்களின்கூட்டமைப்புஇடையேயானதொழில்துறைமுத்தரப்புகுழுக் கூட்டம்10.08.2017அன்றுநடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் மருத்துவ சேவைமற்றும்பணிநிலைமைகளை மேம்படுத்துதல்குறித்தவிதிகள்வகுக்கப்பட்டுள்ளதா?விற்பனைபிரதிநிதிகள் மற்றும் அது சார்ந்த அனைவரிடமும் இது தொடர்பாக கருத்துக்கள் கேட்கப்பட்டதா? விற்பனை ஊக்குவிப்பு ஊழியர்களின்(நிபந்தனைசேவை)சட்டம் 1976, பிரிவு 12 இன் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்டபடி விற்பனை ஊழியர்களுக்குஎந்தவிதிகளும்இல்லைஎன்பதும் உண்மையா?

மருந்துநிறுவனங்கள்அதன்ஊழியர்களை ஆட்குறைப்பு செய்வதை பெரிய அளவில் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்மற்றும்அவர்களின் வேலை பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

**3. தொடர்ந்து அதிகரிக்கும் விமானக் கட்டணம். நடவடிக்கை என்ன?**

**பி. வில்சன்**



கடந்த ஆறு காலாண்டுகளில் உள்நாட்டுவிமான கட்டணம்40%க்கு மேல் அதிகரித்துள்ளதைகுறித்துமாநிலங்களவையில் இன்று கேள்வி எழுப்பியுள்ள திமுக எம்.பி. பி. வில்சன், மேலும் நாட்டிலுள்ள விமான போக்குவரத்து நிறுவனங்கள் செயற்கையான பற்றாக்குறையை உருவாக்கி விமான கட்டணத்தை அதிகரிக்கச் செய்கின்றனர். இதை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

அதிகவிமானநிலையக்கட்டணங்கள் வசூலிப்பதில் உலகிலேயே இந்தியாமுதலிடத்தில்இருப்பதாகக்குறிப்பிட்டுசர்வதேசவிமானபோக்குவரத்து சங்கம் அறிக்கை விடுத்துள்ளது, இதற்கு ஒன்றிய அரசு பதிலளிக்க வேண்டும்.

விமான நிலையங்கள் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையம் தற்போதுள்ள விமான நிலையக் கட்டணங்களுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறதா என்பதையும் தெரிவிக்க வேண்டும் என கூறினார்.

**4. உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்த கோரிக்கை**

**டி.எம். கதிர் ஆனந்த்!**



தமிழ்நாட்டில் குறிப்பாக வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்உணவுப் பதப்படுத்தும் தொழில்களை (FPI) மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் ஒன்றியஅரசுமுன்மொழிந்துள்ளசிறப்புத் திட்டங்களின் விவரங்கள், உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கு ஆதரவாக பழக் கூழ், சேமிப்பு மற்றும் பேக்கேஜ் தொழில்களை நிறுவுவதற்கு ஒன்றியஅரசாங்கத்தால்எடுக்கப்பட்ட பயனுள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் வெளியிட வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

**5. வெள்ளக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் என்ன?**

**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு!**



தமிழ்நாட்டில்வெள்ளத்தால்பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வெள்ளத்தை கட்டுப்படுத்தவும் வெள்ள அபாய பகுதிகளில் வடிகால்கள் ஏற்படுத்தவும் ஒன்றிய அரசு இதுவரையில் செயல்படுத்தியுள்ளதிட்டங்கள்பற்றியவிவரங்கள் கேட்டு தி.மு.க. எம்.பி. டாக்டர். கனிமொழிஎன்விஎன்சோமுமாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். ஏற்கனவேதொடங்கப்பட்டுள்ளவெள்ளக்கட்டுப்பாடுமற்றும்வடிகால்திட்டங்கள் குறித்த விவரங்களும் அதன் பயன்களின்விவரங்களையும்வெளியிட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

**6. சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் நிலை என்ன?**

**எம். எம். அப்துல்லா!**



சுயதொழில் மற்றும் வருமானம் ஈட்டுவதற்காக தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதிக் கழகம் (NMDFC)சிறுபான்மையினருக்கு வழங்கும்சலுகைநிதித்திட்டங்களின் விவரங்கள் மற்றும் கடந்த ஐந்தாண்டுகளில் வழங்கிய நிதியின் விவரங்களையும் வெளியிடுமாறு திமுக மாநிலங்களவை உறுப்பினர் எம். எம். அப்துல்லா இன்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்தஐந்தாண்டுகளில்தமிழ்நாட்டில்பயன்பெற்றவர்களின்விவரங்கள் துறைவாரியாக மற்றும் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளிலுள்ள சிறுபான்மையினருக்கு இத்திட்டம் சென்றடைவதை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன எனவும் அவர் கேட்டுள்ளார்.

**7. கல்வியில் பின்தங்கியவை என கண்டறியப்பட்ட மாவட்டங்களின் நிலை என்ன?**

**ஈஸ்வரசாமி கேள்வி!**



கடந்த ஐந்து ஆண்டுகளில் எடுத்தகணக்கெடுப்பின்படி நாடு முழுவதும் கல்வியில் பின் தங்கிய மாவட்டங்கள் என கண்டறியப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்களைவெளியிடவேண்டும்எனதிமுக எம்.பி. ஈஸ்வரசாமி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். அதேபோல் இந்த மாவட்டங்களில் உள்ள SC மற்றும்STமக்கள்தொகைசதவீதம்,தமிழ்நாட்டில் SC/ST மக்கள்தொகை அதிகமுள்ள பகுதிகளில் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களை அரசு கண்டறிந்திருந்தால் அதன் விவரங்களை வெளியிட வேண்டும், அந்த பகுதிகளில் கல்வியை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப்பட்டதிட்டங்கள்/முயற்சிகளின் விவரங்கள், இந்த மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் சிறப்பு நிதி, உதவித் தொகை திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான திட்டங்கள் என்னென்ன? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

---

### நாடாளுமன்ற கழக முன்னாள் உறுப்பினர்

# கோவை இரா.மோகன் மறைவு !

## நா.கார்த்திக் - கழக முன்னணியினர் நேரில் அஞ்சலி!

*கோவை, டிச.11-*

கோவை நாடாளுமன்ற கழக முன்னாள் உறுப்பினர் இரா.மோகன் (வயது 81) அவர்கள் நேற்று காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

கழகத்தில் அவர் ஆற்றிய பணியை கருத்தில் கொண்டு அவருக்கு 2022ஆம் ஆண்டு நடை பெற்ற கழக முப்பெரும் விழாவில் அவருக்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ‘அண்ணா விருது’ வழங்கி சிறப்பித்தார்.

மறைந்த இரா.மோகன் உடலுக்கு கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக் உள்ளிட்ட கழக முன்னணியினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

கோவை இரா.மோகன் 13 வயதிலேயே நகர்மன்றத் தேர்தலில் கையில் இருவண்ணக் கொடியேந்தி, கழக வேட்பாளர்களுக்காக வீதி வீதியாக வாக்கு சேகரித்தார்.



1964ஆம் ஆண்டில் கல்லூரியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த நேரத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்தில் தீவிரமடையத் தொடங்கியது. போராட்டத்தின் போது, கோவை சலிவன் வீதி தபால் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. அதன் காரணமாக இரா.மோகன் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

1972ஆம் ஆண்டில் கழக அமைப்புத் தேர்தலில் போட்டியிட்டு, நகர துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார். 1975ஆம் ஆண்டில் தமிழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், பிரதமர் இந்திராகாந்தி நாடு முழுவதும் அவசரநிலை பிரகடனம் செய்தார். நாடு முழுவதிலும் பல அரசியல் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். தமிழகத்தில் மட்டும் கைது படலம் நடைபெறவில்லை. கழகத்தின் சார்பில் மாநிலம் முழுவதிலும் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு அவசர நிலைக்கு எதிராக இரா. மோகன் அவர்கள் பேசி வந்தார்.

1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கோவையில் நடைபெற்ற கழக மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் அவசர நிலைக்கு எதிராகப் பேசினார்கள். முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஒன்றிய அரசு, அவசர நிலை அறிவிப்பை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று உறுதிபடக் கூறினார்.

இதன் விளைவாக தமிழகத்தில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளராக இருந்த தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட கழகமுன்னணியினர் பலரும் கைது செய்யப்பட்டனர். கோவையில் கழக முன்னணியினருடன் இரா. மோகன் அவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இரா.மோகன் அவர்கள் சிறையில் இருந்த நேரத்தில், அவரது தந்தையார் மறைவெய்தினார். தந்தையின் இறுதிச் சடங்கு நடத்த ஒரு நாள் மட்டும் பரோல் வழங்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்புக்கு எதிரான சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டபோது கைது செய்யப்பட்டார்.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கோவை தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று மக்களவை உறுப்பினராகவும் 1989ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் சிங்காநல்லூர் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

ரங்கசாமி, திருமதி தனலட்சுமி அம்மாள் இணையருக்கு மகனாக 3.7.1943 அன்று பிறந்த இரா.மோகன் அவர்கள், சுயமரியாதை முறைப்படி 1972ஆம் ஆண்டில் ஆடி மாதத்தில் திருமதி சுகுணா அம்மையாரை மணந்தார். இவருக்கு இரண்டு மகள்கள். ஒருவர் டி வேலரா, மற்றவர் கவிதா.

இத்தகு சிறப்புக்குரிய கோவை இரா.மோகன் அவர்களின் கழகப் பணியினைப் பாராட்டும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் 15.9.2022 அன்று விருதுநகர், பட்டம்புதூர், அண்ணா நகர் கலைஞர் திடலில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “அண்ணா விருது” வழங்கிச் சிறப்பித்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

---

### தமிழ்நாட்டில் – அதிக

# கேலோ இந்தியா மையங்கள் திறக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி

*புதுடெல்லி, டிச. 11-*

தமிழ்நாட்டில் அதிக ‘கேலோ’ இந்தியா மையங்கள் (KIC) திறக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா எனநாடாளுமன்ற மக்களவையில்கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன்கேள்விஎழுப்பினார்.

அதன் விபரம் வருமாறு :-

கேள்விகள்: அ. தமிழ்நாடு உள்ளிட்ட நாடு முழுவதும் மாநிலம் மற்றும் மாவட்டம் வாரியாக கேலோ இந்தியா மையங்களில்(KIC)பயிற்சிபெற்றுள்ளவிளையாட்டுவீரர்களின் எண்ணிக்கை மற்றும் மாநில, தேசிய,சர்வதேசஅளவில்இந்த வீரர்கள்செய்தசாதனைகளின் விபரங்கள்.

ஆ. தமிழ்நாடு உள்ளிட்ட நாடு முழுவதும் மாநிலம் மற்றும்மாவட்டவாரியாகசெயல்படும்KICமற்றும்விளையாட்டு கல்விக்கூடங்களின் எண்ணிக்கை

இ. நாடு முழுவதும் குறிப்பாக தமிழ்நாட்டில் அதிக KICக்களை திறக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா,ஈ.அப்படியானால்அதன் விபரங்கள்மற்றும்இல்லைஎன்றால் அதற்கான காரணங்கள், உ. இந்த மையங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் மற்றும் நடப்பு ஆண்டில் மாநில வாரியாக விளையாட்டுக் கட்டமைப்புகளை நிறுவுதல்/ உருவாக்குதல், இயக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள்;மற்றும்ஊ.இத்திட்டத்தின்நோக்கத்தைஅதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?



**ஒன்றியஇளைஞர்விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா அளித்த பதில்:**

அ. தமிழ்நாடு உட்பட கேலோஇந்தியாமையங்களில் (KICs) பயிற்சி பெற்ற மாநிலம் மற்றும் மாவட்ட வாரியாக விளையாட்டு வீரர்கள் மற்றும் மாநில,தேசியமற்றும்சர்வதேச அளவில் இந்த விளையாட்டு வீரர்கள் சாதனைகள் விவரங்கள் இந்த இணையதளத்தில் கிடைக்கின்றன.

https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters

ஆ. தமிழ்நாடு உட்பட, கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படும் கேலோ இந்தியாமையங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற அகாடமிகளின் மாநில வாரியான விவரங்கள் இந்த இணையதளத்தில் கிடைக்கின்றன. https://dashboard.kheloindia.gov.in/ statewisekheloindiacenters

இ. மற்றும்ஈ. ஆம்,ஐயா.தமிழகம் உட்பட நாடு முழுவதும் 1250 KIC களை திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இன்றுவரை அறிவிக்கப்பட்ட அனைத்து KICகளின் விவரங்களும் இந்த இணையதளத்தில்கிடைக்கின்றன. https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters

உ. கடந்த மூன்று வருடங்கள்மற்றும்நடப்பு ஆண்டில்KICகளில் விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல்/ உருவாக்குதல், இயக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் மாநில வாரியான விவரங்கள் இந்த இணையதளத்தில் கிடைக்கின்றது.

https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters

இவ்வாறு ஒன்றிய அரசு பதில் அளித்தது.

---



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.மோகன் அவர்களின் மறைவையொட்டி அவரது இல்லத்திற்கு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் நேரில் சென்று அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினார். கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி,கோவை மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், மு.மா.ச. முருகன், மகுடபதி பகுதி கழக செயலாளர்கள் ப.பசுபதி,கார்த்திக்செல்வராஜ். வட்டக் கழகச் செயலாளர்கள், சண்முகசுந்தரம், அமானுல்லா, டவுன் பா.ஆனந்தன், பணிகள் குழு தலைவர் சாந்திமுருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், பையர்நத்தம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 200 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார்.உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன்,மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அ.சத்தியமூர்த்தி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள், உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.